# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 150/மா/2024
**நாள்:** 16.12.2025

| | | |
|---|---|---|
| கோ. கோவிந்தராஜ்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| மண்டல அலுவலர், மண்டலம்–9<br>பெருநகர சென்னை மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 28.08.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.08.2024 அன்று பெறப்பட்டு 150/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 28.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவுடன் அனுப்பியுள்ள 24.07.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "சென்னை மாநகராட்சி, வார்டு 122 எல்லைக்குட்பட்ட கணேஷபுரம், 3–வது தெரு, நந்தனம், சென்னை–35 மாநகராட்சி துப்புரவு அதிகாரிகளின் விளம்பரம் செய்திருக்கும் அடுக்குமாடி குடியிருப்பு Lakshmi Apartments மூன்று தளம் கட்டிடம் ஆகும். இந்த அடுக்குமாடி குடியிருப்பு சேமியர்ஸ்–3வது தெரு ஆகும். Lakshmi Apartments மாநகராட்சி சாலையை சுமார் 20 அடி மறித்து 3 அடுக்கு கட்டப்பட்டுள்ளது. மேலும் கதவு எண் 21, Chamiers Road, Nandanam, Chennai-35 முகவரியில் இயங்கும் Fresh to Home கட்டிட உரிமையாளர் சேமியர்ஸ்–3வது தெருவை சுமார் 20 அடி மாநகராட்சிக்கு சொந்தமான தெரு சாலையை மறித்து 3 தளம் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். சேமியர்ஸ் சாலை தொடக்கத்தில் Lakshmi Apartments முடியும் நிலத்தில் Fresh to Home வணிக வளாக கட்டிடம் சாலை ஆக்கிரமிப்பாகும். இரு கட்டிடங்களுக்கு நடுவே செல்லும் சாலை சுமார் 40 அடி உள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். இந்த இருகட்டிடங்கள் இருக்கும் இடத்தில் சாலை 10 அடி தான் உள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசலும் கணேஷபுரம் பகுதியில் உள்ள தெருக்களில் தீயணைப்பு வாகனம் குடிநீர் கழிவுநீர் வாகனம் 108 Ambulance மற்றும் கனரக வாகனங்கள் சேமியர்ஸ் சாலையில் செல்ல முடியாமல் அங்கு வசிக்கும் மக்கள் கூறுகிறார்கள். ஆகவே, சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட இரு கட்டிடங்களை இடித்து 15 தினங்களில் பதில் அளிக்க சென்னை மாநகராட்சி ஆணையர், உதவி ஆணையர், உதவி பொறியாளர் இவர்களுக்கு 08.07.2022 அன்று அளிக்க புகார்கள் இம்மனுவுடன் இணைப்பு. AE எதிர்மனுதாரரிடம் கையூட்டு பெற்றுக்

கொண்டு மைலாப்பூர் வட்டாட்சியர் அளவீடு செய்ய Notice அளிக்கப்பட்டதாக தெரிவித்து ஆக்கிரமிப்பை அகற்றவில்லை.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 24.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்படாததால் 28.03.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் 17.11.2025 நாளிட்ட கடிதம் எண்.ம.அ.ந.க.எண் 05339/2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

> ''எண் 21, சேமியர்ஸ் மூன்றாவது லேன், சேமியர்ஸ் சாலை, நந்தனம், சென்னை–35 உட்பட்ட கட்டிடத்திற்கு மனுதாரர் அளித்துள்ள புகாரின் அடிப்படையில் கள ஆய்வு 30.05.2024 அன்று மேற்கொள்ளப்பட்டு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது.
>
> மேலும் மைலாப்பூர் வட்டாட்சியர் அவர்களுக்கு 25.05.2024 அன்று நில அளவையர் மூலம் சாலை பரப்பளவு அளந்து கொடுக்கும்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
>
> மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை மனுதாரர் அவர்களுக்கு 03.06.2024 அன்று கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மயிலாப்பூர் வட்டாட்சியர் அலுவலகம் மூலம் சாலை பரப்பளவு அளந்து கொடுக்கும்பட்சத்தில் மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 18.11.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 18.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> ''மனுதாரர் திரு கோ.கோவிந்தராஜ் தனது 28.08.2024 நாளிட்ட மனுவில் சென்னை மாநகராட்சி வார்டு எண்.122 எல்லைக்குட்பட்ட கணேஷ்புரம் 3வது தெரு, நந்தனம், சென்னை–35, மாநகராட்சி துப்புரவு அதிகாரிகளின் விளம்பரம் செய்திருக்கும் அடுக்குமாடி குடியிருப்பு Lakshmi Apartments மூன்று தளம் கட்டிடமாகிய அடுக்குமாடி குடியிருப்பு சேமியர்ஸ் 3வது தெருவில் உள்ள Lakshmi Apartments மாநகராட்சி சாலையை சுமார் 20அடி மறித்து 3 அடுக்கு கட்டப்பட்டுள்ளது. கதவு எண்.21 சேமியர்ஸ் ரோடு, நந்தனம், சென்னை–35 முகவரியில் இயங்கும் Fresh to Home கட்டிட உரிமையாளர் சேமியர்ஸ் 3வது தெருவை சுமார் 20அடி மாநகராட்சிக்கு சொந்தமான தெரு சாலையை மறித்து 3 தளம் கட்டிடங்கள் கட்டப்பட்டும், சேமியர்ஸ் சாலை தொடக்கத்தில் Lakshmi Apartments முடியும் நிலத்தில் Fresh to Home வணிக வளாக கட்டிடம் சாலை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது. இரு கட்டிடங்களுக்கு நடுவே செல்லும் சாலை சுமார் 40 அடி ஆகும், இரு கட்டிடங்கள் இருக்கும் இடத்தில் சாலை 10 அடி தான் உள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசல் , கணேஷ்புரம் பகுதியில் உள்ள தெருக்களில் தீயணைப்பு வாகனம், குடிநீர் கழிவு நீர் வாகனம், 108 ஆம்புலன்ஸ் மற்றும் கனரக வாகனங்கள் சேமியர்ஸ் சாலையில் செல்ல முடியாமல் மக்கள் அவதி படுகிறார்கள்.
>
> இந்த ஆக்கிரமிப்பு குறித்து மைலாப்பூர் வட்டாட்சியர் அவர்களுக்கு அளவீடு செய்யக் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் வட்டாட்சியர் அளவீடு செய்தப்பின் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டது. இது 2022 முதல் வட்டாட்சியரால் அளவீடு செய்யப்படாமல் உள்ளது. எனவே மைலாப்பூர் வட்டாட்சியரை பெருநகர சென்னை

மாநகராட்சி, மண்டலம் 9ன் சம்மந்தப்பட்ட அலுவலர்களால் நேரடியாக தொடர்பு கொண்டு அளவீடு செய்து ஆக்கிரமிப்பினை அகற்ற உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவிப் பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 18.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் குறிப்பிட்ட சென்னை–35 சேமியர்ஸ் மூன்றாவது லேன், சேமியர்ஸ் சாலை நந்தனம், கதவு எண்.21 உள்ள கட்டிடத்திற்கு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 30.05.2024 அன்று தாக்கீது வழங்கப்பட்டது.

மேலும் மைலாப்பூர் வட்டாட்சியர் அவர்களுக்கு 02.08.2022 அன்று மேற்கண்ட கட்டிடம் அமைந்துள்ள சாலையின் பரப்பு அளவை அளந்து கொடுக்கும்படி கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. இது வரை மைலாப்பூர் வட்டாட்சியர் அவர்களால் சாலை அளவை அளவீடு செய்யவில்லை. ஆனால் மேற்கண்ட கடிதம் தொடர்பாக மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் வினாவிற்கு 2022க்கு பதிலாக 2024 என்று தவறுதலாக தெரிவித்துவிட்டேன்.

மேற்கண்ட சாலை அளவீடு செய்வது தொடர்பாக மைலாப்பூர் வட்டாட்சியர் அவர்களை நேரடியாக சந்தித்து சாலையினை அளவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை மாநகராட்சி வார்டு எண்.122 எல்லைக்குட்பட்ட சென்னை–35, நந்தனம், கணேஷ்புரம், சேமியர்ஸ் 3வது தெருவில் உள்ள Lakshmi Apartments என்ற மூன்று தளம் கொண்ட கட்டிடம் மாநகராட்சி சாலையை சுமார் 20 அடி ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது என்பதும், Lakshmi Apartments அடுக்குமாடி குடியிருப்பின் முடியும் இடத்தில் கதவு எண்.21 சேமியர்ஸ் ரோடு, நந்தனம், சென்னை–35 முகவரியில் இயங்கும் Fresh to Home கட்டிட உரிமையாளர் சேமியர்ஸ் 3வது தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 20அடி சாலையை ஆக்கிரமித்து 3 தளம் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது என்பதும், இரு கட்டிடங்களுக்கு நடுவே செல்லும் சாலை சுமார் 40 அடி இருந்த இடத்தில், தற்போது 10 அடி தான் உள்ளதால், போக்குவரத்து நெரிசலும், தீயணைப்பு வாகனம், குடிநீர் கழிவு நீர் வாகனம், 108 ஆம்புலன்ஸ் மற்றும் கனரக வாகனங்கள் சேமியர்ஸ் சாலையில் செல்ல முடியாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பதும், இந்த ஆக்கிரமிப்பு குறித்து மைலாப்பூர் வட்டாட்சியர் அளவீடு செய்தப்பின் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது என்பதும், இது 2022 முதல் வட்டாட்சியரால் அளவீடு செய்யப்படாமல் உள்ளதால், மைலாப்பூர் வட்டாட்சியரை பெருநகர சென்னை மண்டலம் 9ன் சம்மந்தப்பட்ட அலுவலர்களால் நேரடியாக தொடர்பு கொண்டு அளவீடு செய்து ஆக்கிரமிப்பினை அகற்ற உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட சென்னை–35 சேமியர்ஸ் மூன்றாவது லேன், சேமியர்ஸ் சாலை நந்தனம், கதவு எண்.21 உள்ள கட்டிடத்திற்கு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 30.05.2024 அன்று தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், மைலாப்பூர் வட்டாட்சியருக்கு மேற்கண்ட கட்டிடம் அமைந்துள்ள சாலையின் பரப்பளவை அளந்து கொடுக்கும்படி 25.05.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் கோரப்பட்டுள்ளது என்பதும், இதுவரை மைலாப்பூர்

வட்டாட்சியர் அவர்களால் சாலை அளவை அளவீடு செய்யவில்லை என்பதும், மேற்கண்ட சாலை அளவீடு செய்வது தொடர்பாக மைலாப்பூர் வட்டாட்சியர் அவர்களை நேரடியாக சந்தித்து சாலையினை அளவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்ட சென்னை–35 சேமியர்ஸ் மூன்றாவது லேன், பரப்பளவை அளவீடு செய்வது தொடர்பாக மைலாப்பூர் வட்டாட்சியர் அவர்களை நேரடியாக சந்தித்து சாலையினை அளவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, மைலாப்பூர் வட்டாட்சியரை நேரிடையாக சந்தித்து மேற்கண்ட சாலையை சரியான முறையில் அளவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும் மேற்படி சாலையை அளவீடு செய்வதற்கு மைலாப்பூர் வட்டாட்சியர் அவர்களை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலர் நேரிடையாக சந்தித்து அளவீடு செய்வது குறித்தான அவசியத்தை தெளிவுபடுத்தி, உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர், சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 1 லேக் ஏரியா, 4குறுக்கு தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை–600 034.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

19/12/25

செயலாளர்

சென்னை–600 032